(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 2(14).]**

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2023 நவம்பர் 25 சனிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2023 டிசம்பர் 04, திங்கட்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்,— *சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை*,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26 (1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரைகளுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசங்களை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 யூலை 26 ஆம் திகதிய 2342/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.11.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— *கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2019)*,— 1981 ஆம் ஆண்டின் 75 ஆம் இலக்க, கரும்பு ஆராய்ச்சி நிறுவனச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் 2023.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்டக் கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.06.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— *தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2020)*,— 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் 2023.02.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்டக் கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.06.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— *தலவாக்கலை இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2019)*,— 1993 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேயிலை ஆராய்ச்சி நிறுவனச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் 2023.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தலவாக்கலை இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்டக் கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.06.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் III ஆம் பாகத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் 2023.03.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்டக் கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.06.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2021),— 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் 2023.03.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்டக் கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.06.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

*

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளைத் திருத்துதல்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 137 இன் பிரகாரம் தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளைத் திருத்துவதற்கான பின்வரும் திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமாக:-

**தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 113 ஐ உடனடுத்துப் பின்வரும் புதிய நிலையியற் கட்டளையாகிய 113 அ ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையை உட்புகுத்துக:—**

**புதிய நிலையியற் கட்டளை 113 அ,—**

**சட்டவாக்கத்திற்குப் பின்னரான நுண்ணாய்வு பற்றிய குழு**

113 அ. (1) தெரிவுக் குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்படும் 21 உறுப்பினர்களைக் கொண்ட, "சட்டவாக்கத்திற்குப் பின்னரான நுண்ணாய்வு பற்றிய குழு" எனப் பெயர் குறிப்பிடப்படவிருக்கும் குழு ஒன்று இருத்தல் வேண்டும்.

(2) தற்போதுள்ள சட்டவாக்கத்தைப் பரிசீலித்து மக்களின் எதிர்பார்ப்புக்களை அடையும் நோக்கத்திற்காக அவசியமான சீர்திருத்தங்களை உறுதிப்படுத்துவதற்குப் பாராளுமன்றத்திற்கு அவசியமான திருத்தங்களை முன்மொழிவது சட்டவாக்கத்திற்குப் பின்னரான நுண்ணாய்வு பற்றிய குழுவின் கடமையாக இருத்தல் வேண்டும்.

(3) காலத்திற்குக் காலம் தேவைப்படும் சட்டவாக்கச் சீர்திருத்தங்களை உறுதிப்படுத்துவதற்காகச் சட்டவாக்கத்திற்குப் பின்னரான நுண்ணாய்வு பற்றிய குழு, அவசியமெனின், நிபுணர்களின் உதவியுடன், ஆய்வுகளில் ஈடுபடுவதற்கு வலுவூட்டப்படுகின்றது.

(4) குறிப்பிடப்பட்ட இலக்கினை அடைவதற்காகச் சட்டவாக்கத்திற்குப் பின்னரான நுண்ணாய்வு பற்றிய குழுவால் நிறைவேற்றப்பட்ட கடமைகளையும் செயற்பாடுகளையும் அக்குழு ஆறு (06) மாதங்களுக்கு ஒரு தடவை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிட வேண்டும்.

பா 81/2023

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ பியங்கர ஜயரத்ன,— தற்போது இலங்கையில் கிரிக்கெட் விளையாட்டுத் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கும் அது தொடர்பான பொருத்தமான விதப்புரைகளை மேற்கொள்வதற்குமான பாராளுமன்ற விசேட குழு,— தற்போது கிரிக்கெட் விளையாட்டுத் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் இலங்கையில் கிரிக்கெட் விளையாட்டை நேசிக்கும் அனைவரினதும் பேசுபொருளாக மாறி கவனத்தையும் ஈர்த்துள்ளதால்;

2023 உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு தகுதி பெறுவதற்காக நடைபெற்ற தகுதிகாண் சுற்றுப்போட்டியில் தாம் கலந்து கொண்ட அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி ஈட்டிய இலங்கை கிரிக்கெட் அணி கடந்த உலகக் கிண்ண சுற்றுப்போட்டியில் தோல்வியைத் தழுவியமைக்கான காரணங்கள் யாவை என்பதை ஆராய்வதற்கும், இலங்கை கிரிக்கெட் நிறுவகத்தின் மீது விளையாட்டுத்துறை அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரை உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களினால் சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராய்வதற்கும், விளையாட்டுத்துறை அமைச்சருக்கும் இலங்கை கிரிக்கெட் நிறுவகத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதலை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச கிரிக்கெட் பேரவையானது (International Cricket Council) இலங்கை கிரிக்கெட் விளையாட்டினைத் தடைசெய்தல் மற்றும் அது சம்பந்தமாக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்கும், இலங்கையில் தேசிய மற்றும் பாடசாலை மட்ட கிரிக்கெட் விளையாட்டை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை விதப்புரை செய்வதற்கும் பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுகின்றது.

2. (அ) குழுவின் தவிசாளரும் அதன் உறுப்பினர்களும் சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளின் பிரகாரம், குழுவானது பத்து (10) உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது —

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) மேற்படி விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராய்வதற்கு அது அவசியமென தீர்மானிக்கும் வகையில் அதன் முன் தோன்றுமாறு எவரேனும் ஆளை அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை சமர்ப்பிக்குமாறு பணிப்பு விடுப்பதற்கும், அத்தகைய அனைத்து சாட்சிகளையும் எழுத்து மூலமாகவும் வாய் மூலமாகவும் பெற்றுக்கொள்வதற்கும்,

(இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) பாராளுமன்றத்தின் ஏதும் ஒத்திவைப்பினால் தடைபெறாது காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளை முன்வைப்பதற்கும், கூடுவதற்கும்;

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு அதன் முதலாவது அமர்வுத் திகதியிலிருந்து இரண்டு (02) மாத காலத்திற்குள் அல்லது பாராளுமன்றத்தால் வழங்கப்படக்கூடிய அத்தகைய வேறு அல்லது மேலதிக காலப் பகுதிக்குள் அதன் அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.